**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.37/2024** |
| Sessions : | | | |
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 4** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| **Name :** | விஜயகுமார் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **11.08.2026.**

**குற்றம்சாட்டப்பட்டவர்கள் முன்னிலை.**

**முதல் விசாரணை:**

நான் அரியலூரில் வசிக்கிறேன். பால்சொசைட்டியில் வேலைசெய்கிறேன். ராமச்சந்திரன் என் தாய்மாமா. அசா.1 எனதுஅக்கா. ஆஜர் எதிரிகளை தெரியும். 22.08.2022ம் தேதி அன்று இரவு 07.00 மணிக்கு இருசக்கரவாகனம் ஸ்பேர்பார்ட்ஸ்வாங்க அரியலூர் மாதாகோவில் அருகே போனேன். அங்கு ஜெகநாதன், மணிகண்டன், பாலமுருகன் ஆகியோர்கள் 3பேர்கள் அரியலூர் மாதாகோவில் காயத்ரி ஸ்பேர்பார்ஸ்ட் கடை அருகில் பேசிக்கொண்டு இருந்தார்கள். ராமச்சந்திரனை ஒருவாரத்திற்குள் சாகஅடிச்சிறனும் அப்படி செய்தால் தான் ஊருக்குள் நமக்கு ஒரு பேர்இருக்கும் என்று மூவரும் பேசிக்கொண்டார்கள். நான் அதை காதில் வாங்கிகொண்டு ஜாமன் வாங்கமால் திரும்பிவந்துவிட்டேன். அதன்பிறகு என்மாமா ராமச்சந்திரனுக்கு போன்பண்ணேன் அது போகவில்லை. மறுநாள் பால்பண்ணையில் கூட்டம் இருந்ததால் ராமச்சந்திரனை பார்க்க போகமுடியவில்லை. அடுத்தநாள் மாக்காய்குளம் வீட்டிற்கு போய் இந்த மாதிரி 3பேர்கள் பேசிக்கொண்டு

இருந்தார்கள். நீங்கள் எங்கேயும் தனியாக போகாதீர்கள் என்று எச்சரிக்கை செய்துவிட்டு வந்தேன். 27.08.2022ம் தேதி நான் பால் ஊற்றி கொண்டுஇருக்கும்போது மாலை 05.00 அளவில் என்அம்மா எனக்கு போன் செய்து மாமா ராமச்சந்திரனை வெட்டி கொன்றுவிட்டார்கள் என்று சொன்னார். உடனே என்னை சீக்கிரம் வரசொன்னார். நான் வேலையை பாதியில் விட்டுவிட்டு செல்லமுடியவில்லை. நான் சுமார் 06.00, 06.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று பார்த்தபோ ஆம்புலன்சில் ஏற்றி சென்றுவிட்டதாக சொன்னார்கள். உடனே அரியலூர் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன். அங்கு அத்தை, அத்தை மகள் யாரும் இல்லை. பக்கத்தில் விசாரித்தபோது போலிசில் புகார் கொடுக்க சென்றிருப்பதாக சொன்னார்கள். இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

22.08.2022ம் தேதி ஜெகநாதன், மணிகண்டன், பாலமுருகன் அரியலூர்மாதாகோவில் தெரு காயத்ரி ஸ்பேர்பார்ட்ஸ் அருகில் பேசிக்கொண்டிருந்த விவரத்தை 25.08.2022ம் தேதி காலையில் அ.சா.1 லலிதா, இறந்துபோன ராமச்சந்திரனிடம் சொன்னேன். 3பேரும் பேசிக்கொண்டிருந்த விவரத்தை நான் வேறு யாரிடமும் சொல்லவில்லை என்றால் எனது அம்மாவிடம் மட்டும் சொன்னேன். எனதுஅம்மா வேறு யாரிடமாவது இதுபற்றி சொன்னாரா என்றால் மாமாவிடம் நான் சொல்லிகொள்கிறேன். வேறு யாரிடமும் சொல்லவேண்டாம் என்று சொன்னேன். 22.08.2022ம் தேதி ஜெகநாதன், மணிகண்டன், பாலமுருகன் அரியலூர்மாதாகோவில் தெரு காயத்ரி ஸ்பேர்பார்ட்ஸ் கடை அருகில் நான் அவர்களை பார்க்கவில்லை என்றும், அவர்கள் பேசிக்கொண்டிருந்தாக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

Sd/-Dr. Sathiyamurthy,
Principal District Judge,
Perambalur.